**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 30/2024**

**PW4**

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father's/Husband's Name | : | சின்னப்பா |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.04.2025

Accused present.

**முதல் விசாரணை**

நான் மல்லிகாபுரம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இறந்து போன மணிகண்டன் என் சித்தி மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி சிவக்குமார் என் சித்தப்பா. கடந்த 04.12.2022 அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் பெரியேறியில் எங்கள் பக்கத்து வீட்டில் சீமந்தம் நடந்தது. அந்த சமயத்தில் ஆஜர் எதிரி அங்கு வந்து மணிகண்டனுடன் பேசிக்கொண்டிருந்துள்ளார். மணிகண்டன் இறந்தார் என்று தகவல் வந்தது. மணிகண்டன் இறந்தார் என்ற செய்தியை கேட்டு நான் சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலிசார் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன்.

**குறுக்கு விசாரணை-**

பிரேத விசாரணை சென்னையில் உள்ள ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் நடந்தது. அப்போது சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். அவர்களில் குமார், ராஜபாபு, சின்னபையன் ஆகியோர் இருந்தார்கள். பிரேத விசாரணை அறிக்கையில் நாங்கள் கையொப்பம் செய்தோம். தற்போது சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று சொல்கிறார். நான் ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு செல்லவும் இல்லை என்றும், பிரேத விசாரணை செய்தபோது அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தைப்பற்றி கேள்விப்பட்டுதான் சாட்சி அளிக்கிறேன். என்னை என் சித்தப்பா போன் செய்து போய் பார்க்குமாறு சொன்னார். என் சித்தப்பா வந்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது . என்சித்தப்பா சென்னை

மருத்துவமனைக்கு நாங்கள் போய் பார்த்தபோது வரவில்லை. என் சித்தப்பா எனக்கு எந்த போனும் செய்யவில்லை என்றும், நான் கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மணிகன்டன் அடிக்கடி ஊருக்கு வரமாட்டார். அவர் உறவினர்கள் யாரும் ஊரில் இல்லை. நான் சொல்வதுபோல் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.